முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1118

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.10.2022, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானமே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04 ம் நாள் 21.10.2022 வெள்ளிக்கிழமை)
2. ஆசியதும் சுபகிருது துலைதிங்கள்
அரங்கன் ஆற்றல் பெருக உரைப்பேன்
வாசி வென்ற ஞானியர் படை எல்லாம் வலம் வந்து அரங்கனை காத்து வர
வடிவேலன் யான் அரங்கனுள் இருந்து அற்புதம் நடத்துகின்றேன்
3. நடத்தவே ஓங்காரக்குடில் என்பது
ஞானிகளை படைக்கும் ஞான சபையாகும்
இடரின்றி அரங்கன் தரும் தர்மம் எல்லாம்
இந்த உலகையே பிணியிலிருந்து மீட்கும் அருமருந்தாகும்
4. ஆகவே உலகோர் அணுகி அருளமுது உண்டு
(துறையூர் ஓங்காரக்குடிலில் சமைக்கும் உணவு, பசிப்பிணி தீர்ப்பதோடு, உடல்பிணியும், பிறவிப் பிணியும் தீர்க்கும் மருந்தாகும்)
அரங்கன் பால் தீட்சை பெற்று
வரமென என் நாமஜெபம் சொன்னால் போதும்
(ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி என நாமஜெபம் செய்தாலே போதும் அவர்கள் ஞானியாவார்கள்)
வையகத்தில் அவர்களெல்லாம் ஞானிகளாவர்
5. ஞானிகள் ஆவதோடு இந்த உலகை மாற்றுகின்ற
ஞான சக்திகள் பல கூடி
ஞான ஆட்சித் தரும் வண்ணம்
நம்பிக்கை உள்ள நல் உலகை படைத்து பேரற்புதம் புரிவர்
6. ஆகவே அரங்கன் தொடர்பே
அகிலத்தை மாற்றும் ஞானத்தொடர்பு
வரமென அரங்கன் கொள்கை ஏற்றால்
வையகம் சடுதி மாற்றம் காண்பது உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–